தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 27-6-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் இளநிலை பட்டப்படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெறப்பட்டு, கடந்த 20-6-2015 அன்று தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது.

இன்று (27-6-2015), காலை 10.00 மணியளவில் அண்ணா அரங்கத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) ச. மகிமைராஜா அவர்கள் முன்னிலையில், முன்னாள் ராணவத்தினர், விடுதலை வீரர்களின் வாரிசுகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் விளையாட்டுத் துறையைச் சார்ந்தோர் போன்ற சிறப்பு பிரிவினரின் இட ஒதுக்கீட்டிற்கான கலந்தாய்வு நடைபெற்றது.

32 இடங்களுக்கான ஒதுக்கீட்டிற்கு 52 மாணவ மாணவியர் அழைக்கப்பட்டிருந்தனர். இதில், முன்னாள் ராணுவத்தினருக்கான இட ஒதுக்கீட்டில் செல்வி. கன்ஷிகா என்ற மாணவி முதலிடத்திலும், செல்வி. யமுனா என்ற மாணவி இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

விடுதலை வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டில் செல்வி. வைஷ்ணவ தேவி தேர்வு செய்யப்பட்டார். மாற்றுத்திறனாளிகளுக்கான இட ஒதுக்கீட்டுப் பிரிவில் சூர்யா முதல் இடத்தையும் பாரதி இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

விளையாட்டுத் துறையினருக்கான இட ஒதுக்கீட்டில் செல்வன். சாம்ரோஸ், செல்வி. சிந்து ஆகியோர் முறையே முதல் இடத்தையும் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

மேலும், பொது கலந்தாய்வு வரும் 29-6-2015 முதல் தொடங்க உள்ளது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்